சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள ஸ்ரீ தர்மராஜா கோயில்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எஸ். வெள்ள பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள ஸ்ரீ தர்மராஜா கோயில் இடிந்த நிலையிலுள்ளதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) : தர்மராஜா கோவில், கருவறையும், முன் மண்டபமும் நல்ல நிலையில் உள்ளன. விமானத்தில் சுதை வேலைப்பாடுகளும், தெற்கு, வடக்கு, மேற்குப் பக்கங்களிலுள்ள மதிர் சுவர்களும் பழுது பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது. தகுந்த சீரமைப்புகள் மேற்கொள்ள இக்கோயிலுக்கு திருப்பணிக்குழு ஒன்று இந்த ஆண்டு ஆகஸ்டு திங்களில் அமைக்கப்பெற்றுள்ளது.

Deposits of the Retired Executive Officers of Temples.

*133 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the deposits of a number of retired Executive Officers of Temples have not been refunded ; and

(*b*) if so, the steps taken to refund these deposits ?

கோவில் நிர்வாக அதிகாரிகள் பிணைய வைப்புத் தொகை.

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஓய்வு பெற்ற கோயில் நிர்வாக அதிகாரிகள் பலரின் பிணைய வைப்புத் தொகை திருப்பித் தரப்படவில்லையா ?

(இ) ஆமெனில், அதைத் திருப்பித் தருவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : **(அ) ஆம்.**

(இ) நிர்வாக அதிகாரிகளுக்கு சேரவேண்டிய தொகையைத் திருப்பித் தருவதற்கு முன்பு அவர்கள் கட்ட வேண்டிய தொகை ஏதேனும் உள்ளதா என்பது பற்றி அறிய வேண்டிய சமய நிறுவனங்களின் தற்போதைய நிர்வாக அதிகாரிகளிடமிருந்தும் இந்து சமய-அறக்கட்டளை துறை சார்நிலை அதிகாரிகளிடமிருந்தும் அறிக்கைகளை இந்து சமய-அறக்கட்டளைத் துறை ஆணையாளர் கேட்டுள்ளார். நிர்வாக அதிகாரிகளுக்குப் பிணைய வைப்புத் தொகை திருப்பித் கொடுக்கப்பட வேண்டியுள்ள நேர்வுகளில் அவர்கள் பணியாற்றிய சமய நிறுவனங்களின் தணிக்கை அறிக்கைகள், கணக்குகளையும் இதர ஆவணங்களையும் பரிசீலனை செய்த பின்னரே மேற்படி தொகை அவர்களுக்குக் கொடுக்கப் படலாம். அவர்கள் பணி புரிந்த எல்லா சமய நிறுவனங்கள் குறித்தும் அவர் கட்ட வேண்டிய தொகை முடிவு செய்யப்பட்ட பின்னர் அவர் கட்ட வேண்டிய தொகை ஏதேனும் முடிவு செய்யப்பட்டிருப்பின் பிணையத் தொகையிலிருந்து அத்தொகையினைக் கழித்துக் கொண்டு எஞ்சியுள்ள தொகை திரும்பக் கொடுக்கப்படும். முடிவு பெறாமல் இருக்கும் நேர்வுகளை விரைவில் முடிக்க இந்து சமய-அறக்கட்டளை துறை ஆணையாளர் இயன்ற முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகிறார்.

உடுக்குறியிடப்படாத வினாக்கள்

Attack on the Manager and the Assistant Manager of the Chamraj Estates.

27 *Q.*—Thiru V. ISVARMURTI:
Thiru M. ARUMUGASWAMI } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Manager and the Assistant Manager of the Chamraj Estates were attacked by the workers on 14th May 1971; and

(*b*) if so, the action taken thereon ?

A.— (*a*) Yes.

(*b*) A statement @ is placed on the table of the House.

Pension.

28 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that pension has not been finalised in the case of subordinate Police Officers of the State who have retired and are re-employed in Central Government Service?

@ 234 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சத்யமேவ ஜயதே வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS